இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 15-09-2025

# மணிப்பூர் செல்ல இரண்டரை ஆண்டுகளா?

**2023 ஆம் ஆண்டு மணிப்பூரில் கொடூரமான வன்முறை தொடங்கியது. 2025 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மணிப்பூர் சென்றுள்ளார் பிரதமர். எத்தகைய சுறுசுறுப்பான ஒருவரை இந்திய நாடு பிரதமராகப் பெற்றுள்ளது பார்த்தீர்களா?**

இடைப்பட்ட காலத்தில் உலகத்தின் முக்கியமான பாதி நாடுகளுக்கு பயணம் சென்று வந்துவிட்டார் பிரதமர் மோடி. ஆனால் அவரால் இந்தியாவுக்குள் இருக்கும் மணிப்பூருக்குச் செல்ல முடியவில்லை. மக்களைப் பற்றியும், இந்திய நாட்டின் மீதும் அவருக்கு இருக்கும் அக்கறையின் அளவுதான் இரண்டரை ஆண்டு காலம் ஆகும்.

**மணிப்பூர் சென்ற பிரதமர் மோடிக்கு அந்த மாநிலத்து மக்கள் கொடுத்த 'வரவேற்பை' அவர் வாழ்நாளில் மறக்க முடியாது. பிரதமர் பதவியை விட்டு இறங்கிய பிறகும் அவருக்கு இந்தக் காட்சிகள் மறக்காது.**

பல்வேறு இடங்களில் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டன. பெண்கள் கறுப்பு உடை அணைந்து மோடிக்கு எதிராக முழக்கமிட்டனர். மணிப்பூர் பல்கலைகழக மாணவர்கள் கருப்பு கோடி ஏந்தி போராட்டம் நடத்தினர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் நீண்ட நேரம் போராட்ட காரர்களுக்கும் போலீசாருக்கும் இடையே தள்ளுமுள்ளு நிலவியது.

மணிப்பூரில் பேசிய பிரதமர், ‘‘இந்த வன்முறை நமது முன்னோர்களுக்கும் நமது எதிர்கால தலைமுறைக்கும் இழைக்கப்படும் அநீதி. அமைதி மற்றும் வளர்ச்சிப் பாதைக்கு நாம் மணிப்பூரை முன்னோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்” என்று பேசி இருக்கிறார். இந்தச் செயலை இரண்டரை ஆண்டுகளாக அவர் ஏன் செய்யவில்லை என்பது தான் கேள்வி.

2023 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி அன்று மணிப்பூர் எரியத் தொடங்கியது. இதுவரை அரசு கணக்குப் படி 260 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். எண்ணிக்கை இன்னும் ஒரு மடங்கு இருக்கும். 3 ஆயிரம் பேர் காயம் பட்டுள்ளார்கள். ஒரு லட்சம் பேருக்கு மேல் மாநிலத்தை விட்டு இடம் பெயர்ந்துள்ளார்கள். இரண்டரை ஆண்டுகளாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு விட்டது. ஆனால் இது இந்திய பிரதமருக்கு இப்போதுதான் தெரிகிறது.

ஒன்றியத்தை ஆள்வதும் பா.ஜ.க. மணிப்பூரை ஆண்டதும் பா.ஜ.க. ஆனால் இரட்டை இஞ்சின் அரசு, மணிப்பூர் மக்களை காப்பாற்றவில்லை.

மணிப்பூர் முதலமைச்சர் பிரேன்சிங் வீட்டின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினார்கள். பா.ஜ.க. அமைச்சர்களின் வீடுகள் தாக்கப்பட்டன. எம்.எல்.ஏ.க்கள் வீடுகளும் தாக்கப்பட்டன. முதலமைச்சர் பிரேன் சிங்கின் மருமகன் ராஜ்குமார் இமோசிங் எம்.எல்.ஏ.வாக இருக்கிறார். அவர் வீடும் தாக்கப்பட்டுள்ளது. 6 எம்.எல்.ஏ.க்களின் வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன. அப்போதும் மணிப்பூரை ஆண்ட பா.ஜ.க. அரசு அசைந்து கொடுக்கவில்லை. பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் டெல்லிக்கு வந்து பா.ஜ.க. தலைமையிடம் முறையிட்டார்கள். உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் முறையிட்டார்கள். ஆனாலும் மணிப்பூரில் அமைதி திரும்பவில்லை.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரான சபம் ரஞ்சன் லாம்பெல் வீடு தாக்கப்பட்டது. அப்போது அவர் வீட்டுக்குள் தான் இருந்தார். ‘இந்த பிரச்சினையை தீர்த்து வைப்பேன், இல்லாவிட்டால் பதவி விலகி விடுவேன்’ என்று போராட்டக்காரர்களை பார்த்து கையெடுத்து கும்பிட்டுள்ளார் அமைச்சர். இதுதான் அங்குள்ள நிலைமையாக இருந்தது. வெட்கமாக இல்லை பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு.

“மணிப்பூர் மாநிலத்தில் பாதுகாப்புச் சூழல் பலவீனமாகவே உள்ளது. இரண்டு சமூகத்தினைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய குற்றவாளிகள் வன்முறையில் ஈடுபடுவது தேவையில்லாத உயிரிழப்புகளுக்கும், பொது அமைதி சீர்குலைவுக்கும் வழிவகுக்கிறது. சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதர்க்கு தேவையான நடவடிக்கை களை எடுக்கும்படி பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வன்முறை மற்றும் அமைதியைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்” என்று ஒன்றிய உள்துறை அமைச்சகம் அறிக்கை கொடுத்ததோடு தனது கடமை முடிந்ததாக மவுனம் ஆனது.

**குக்கி - மைத்ரி இன மக்களின் மோதலாக இது தொடங்கினா லும் பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனமே இரண்டரை ஆண்டுகளாக நீடிக்கக் காரணம். இதற்கு பொறுப்பேற்க வேண்டியது பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் அல்லவா?**

பிரதமர் பேசுவது உண்மையானால், எதிர்காலத் தலைமுறைக்கு துரோகம் செய்தது அவர் தானே?

இந்தக் கலவரங்களுக்கு காரணமான முதலமைச்சர் பிரேன்சிங்கைக் கூட பதவி நீக்கம் செய்யும் துணிச்சல் முதலில் பா.ஜ.க. தலைமைக்கு இல்லை.

அங்கு நடந்த வன்முறைகள் அனைத்தையும் மணிப்பூர் காவல் துறை வேடிக்கை பார்த்தது. மணிப்பூரில் துப்பாக்கிகள் சர்வசாதாரணமாகக் கிடைக்கும். மேலும், காவல் நிலையங்களில் புகுந்து போராட்டக் காரர்கள் துப்பாக்கிகளைத் தூக்கிச் சென்றார்கள். அதையும் பிரேன் சிங் அரசால் தடுக்க முடியவில்லை.

இதன் உச்சமாக இரண்டு பெண்கள் ஆடைகளையப்பட்டு நிர்வாணமாக அழைத்துச் செல்லப்படுவதும் அதனை பெரும் கூட்டமானது வேடிக்கை பார்த்தபடி நடந்து செல்வதுமான காட்சிகள் வெளியானது.

**‘தினத்தந்தி’ நாளிதழ் பிரேன் சிங்கின் பேட்டியை தலைப்புச் செய்தியாக 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெளியிட்டது. பெண்கள் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டது பற்றி அந்த நிருபர் கேட்டபோது, ‘இது போல நிறைய நடந்துள்ளதே’ என்று பதற்றமே இல்லாமல் சொன்னவர் தான் பிரேன் சிங்.**

2023 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி இந்த கொடூர சம்பவம் நடந்தது. இந்த வீடியோ ஜுலை மாதம் வெளியானது. வெளியான பிறகு, ஜுலை 18 ஆம் தேதிதான் கொடூரத்துக்கு காரணமான சிலரை கணக்குக் காட்டுவதற்காக கைது செய்தார் பிரேன் சிங். அவர்கள் மீதே ஒன்றரை ஆண்டுகள் கழித்து தான் நடவடிக்கை எடுத்தார்கள்.

**பிரதமர் இரண்டரை ஆண்டுகள் கழித்து மணிப்பூர் செல்கிறார். மனச்சாட்சி உறுத்தாதா? மனச்சாட்சி என்பது தான் இருக்கிறதா?**

**விஸ்வகுருவாக அவரை அவரது அடிப்பொடிகள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்திய நாட்டு மக்கள் மீது விசுவாசம் இல்லாத குருவாகக் காட்டிக் கொண்டுவிட்டார்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக ஓசூர் விமான நிலையத்திலிருந்து விழா நடைபெறும் இடத்திற்கு செல்லும் வழியில் ஓசூர், சூளகிரி, குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் வழிநெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.




தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட ஸ்டெம் பூங்காவில் தனது முன்னெடுப்பில், தூத்துக்குடி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கோவில்பட்டி, திருச்செந்தூர், காயல்பட்டினம் ஆகிய நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு தினசரி நிர்வாகத்திற்கு உதவிடவும், மக்கள் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காணவும் செயற்கை நுண்ணறிவு (AI) திறன் பயிற்சியை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி திருநெல்வேலி சாலையில் உள்ள சத்யா ரிசார்ட்டில் நடைபெற்ற கிராமப்புற உட்கட்டமைப்பு மற்றும் பசுமை நிதி உதவிக்கான நபார்டின் ஆதரவு குறித்து பயிற்சி பட்டறையை தொடங்கி வைத்து உரையாற்றினார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, நபார்ட் டி.டி.எம். சுரேஷ், இராமலிங்கம், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# செஞ்சி ஒன்றியத்தில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

செஞ்சி, செப். 15–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டிரங்க பூபதி கல்லூரி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஆலம்பூண்டி ரங்க பூபதி கல்லூரி சேர்மன் ரங்க பூபதி, செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சத்தியமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டுகுத்து விளக்கு ஏற்றி வைத்து முகாமினை தொடங்கி வைத்துமகப்பேறு பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

முகாமில் விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் டாக்டர் லதா, மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் செந்தில்குமார், ரங்க பூபதி கல்லூரி செயலாளர் ஸ்ரீபதி, துணை சேர்மன் ஜெயபாலன், செஞ்சி மேற்கு ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல், டிலைட், ஊராட்சி மன்றத் தலைவர் முத்தம்மாள் சேகர், செஞ்சி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் கமலக்கண்ணன் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் ஏழை எளிய மக்களுக்காக இரவு பகல் பாராமல் உழைத்து வருகிறார். அந்த வகையில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் 48 போன்ற திட்டங்களை அறிவித்து நலம் காக்கும் ஸ்டாலின் என்ற மகத்தான திட்டத்தை அறிவித்து இன்று ஒவ்வொருவருடைய நலனில் அக்கறையுள்ள ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என அவர் பெருமிதம் தெரிவித்தார்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல், மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம், பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை, மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இ.சி.ஜி. உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்று நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள்கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த முகாமில் 3500 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

முன்னதாக எய்ட்ஸ் பால்வினை நோய் இல்லாத உலகை உருவாக்க வலியுறுத்தி முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் அனைவரும் உறுதிமொழி ஏற்று உறுதிமொழி பெயர் பலகையில் கையெழுத்திட்டனர்.

மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல்நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்து அந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர். இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர்.




75 ஆண்டுகளாக இந்தச் சமூகத்தில் மாற்றங்கள் பல ஏற்படுத்தி,
தலைசிறந்த தமிழ்நாடாக நாம் தலைநிமிர்ந்து நடைபோட
வித்திட்டவர் நம் பேரறிஞர் அண்ணா !
–மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

பேரறிஞர் அண்ணா
அவர்களின்
117ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பேரறிஞர் அண்ணா அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கிறார்கள்.

நாள்: 15.9.2025 திங்கட்கிழமை | நேரம்: காலை 10.00 மணி | இடம்: அண்ணா சாலை, சென்னை

செ.ம.தொ.இ / 1072 / வரைகலை / 2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009